நாளும் உழைத்திடும் ஒப்பில்லா முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். சூழ்நிலைக்கு ஏற்ப அந்தப் பகுதியை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, கால்நடை மருத்துவமனை அமைக்க பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

சமுதாய நலக் கூடம்

***22077**—**திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழர்களின் உயிர் காத்து, உலகத் தமிழர்களிடத்தில் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட நல்ல பல திட்டங்கள் உருவாக்கி, செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை உலகறியும். திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக்

2014 பிப்ரவரி 20]

கூடம் கட்டுவதற்குத் தேவையான இடம் கண்டறியப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

முற்பகல் 10-45

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கிணங்க, அஞ்சாமை, அறிவு, துணிவு, ஈகை குணங்களோடு தமிழர்களின் உயிரைக் காக்கவும், உரிமையை மீட்கவும், தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தரணி போற்றும் தன்னலமில்லா தலைவியே! அமைதி, வளம், வளர்ச்சி என்ற இந்தியத் திருநாட்டை வழிநடத்தப் போகும் நாளைய பாரதமே! மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட கடலூர் ஒன்றியம், கண்ணனூர் கிராமத்தில் சுமார் 1,600-க்கும் மேற்பட்ட ஏழையெளிய ஆதி திராவிட மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுடைய சுப காரியங்கள் மற்றும் பொதுக் காரியங்களைச் செய்ய அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை இது. இந்தக் கிராமத்தில் சர்வே எண் 691/8, காலி கிராம நத்தம் புறம்போக்கு நிலம் சுமார் 300 சதுரடியில் உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான கண்ணனூரில் சமுதாய நலக் கூடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் குடியிருப்புகளிலுள்ள ஆதி

திராவிட மக்களின் திருமணங்கள், சமுதாய விழாக்கள் மற்றும் கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அம்மக்களின் வசிப்பிடங்களில் சமுதாயக் கூடங்கள் படிப்படியாக கட்டப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் 100 இலட்சம் ரூபாய் செலவில் 10 சமுதாயக் கூடங்களும், 2012-2013 ஆம் ஆண்டு 150 இலட்சம் ரூபாய் செலவில் 10 சமுதாயக் கூடங்களும், 2013-2014 ஆம் ஆண்டில் 45 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று சமுதாயக் கூடங்களும் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. சமுதாயக் கூடம் வேண்டி அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வந்தவண்ணமுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு எல்லா மாவட்டங்களிலும் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க இயலாத நிலையுள்ளது. இருப்பினும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களின் தேவையின் முக்கியத்துவம் கருதி சமுதாயக் கூடம் கட்ட இடவசதி இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணனூர் பகுதிவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நன்றியை கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.